| வ. எண் | சட்டம் | சட்டப்பிரிவு | குற்றங்கள் | தண்டனை விபரங்கள் | |
|---|---|---|---|---|---|
| | | | | சிறை | அபராதம் |
| 9 | இளைஞர் நீதி (பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு) சட்டம் 2000 (குழந்தை 18 வயதுக்கு உட்பட்டவர்) | பிரிவு 23 | தன்வசம் உள்ள அல்லது தன்னுடைய கட்டுப்பாட்டில் உள்ள குழந்தையை அடித்துத் துன்புறுத்துவது, அனாதையாக விடுதல், வேண்டுமென்றே புறக்கணிப்பது, கொடுமைப்படுத்துவது, இதன்மூலம் ஒரு குழந்தையின் மனதிற்கும், உடலுக்கும் துன்பம் விளைவிப்பது. | 6 மாதம் வரை | அபராதம் (இரண்டும்) |
| | | பிரிவு 24 (1) | பிச்சை எடுக்க ஒரு குழந்தையைப் பயன்படுத்துவது. ஒரு குழந்தையைப் பிச்சை எடுக்கும்படி பணிப்பது | 3 வருடம் | அபராதம் |
| | | பிரிவு 24 (2) | ஒரு குழந்தையைத் தன்வசம் வைத்திருக்கும் ஒருவர் மேற்சொன்ன குற்றம் நடைபெற உடந்தையாக இருப்பது. | 1 வருடம் | அபராதம் |
| | | பிரிவு 25 | வைத்திய ஆலோசனையின்றி ஒரு குழந்தைக்கு (18 வயதுக்கு உட்பட்டவர்) போதை அளிக்கக் கூடிய மதுபானம், இதர போதைப்பொருள் ஆகியவற்றைக் கொடுப்பவர். | 3 வருடம் | அபராதம் |
| | | பிரிவு 26 | உடலுக்கு ஊறுவிளைவிக்கக் கூடிய வேலைகளைச் செய்ய ஒரு குழந்தைளை அழைத்து வருதல், கொத்தடிமையாக வைத்திருத்தல், கொடுக்க வேண்டிய ஊதியத்தை கொடுக்காமல் இருத்தல் அல்லது அத்தகைய குழந்தையின் ஊதியத்தைத் தனக்குப் பயன்படுத்திக் கொள்வது. | 3 வருடம் | அபராதம் |
| 10 | தமிழ்நாடு கட்டாய அடிப்படைக் கல்வி சட்டம் 1994 | பிரிவு 4 | ஒரு குழந்தையைப் பள்ளிக்கு அனுப்பாத பெற்றோர் அல்லது பாதுகாவலர் (குழந்தை 14 வயது நிரம்பாதவர், பள்ளி 5-ம் வகுப்பு வரை) | -- | ரூ. 100 |



# குழந்தைகளின் உரிமைகள்

## - ஒரு கையேடு



நூல் தொகுப்பு :

**சிவா அறக்கட்டளை**

மெயின் ரோடு, திருமலாபுரம், பனவடலி சத்திரம் அஞ்சல்,
சங்கரன் கோவில் தாலுகா, திருநெல்வேலி மாவட்டம்.

Ph: +91-4636-270116
E-mail : sivatrust.tpuram@gmail.com
Website : www.sivatrust.org

| வ. எண் | சட்டம் | சட்டப்பிரிவு | குற்றங்கள் | தண்டனை விபரங்கள் | |
|---|---|---|---|---|---|
| | | | | சிறை | அபராதம் |
| 7 | மருத்துவ ரீதியாக கருக்கலைப்பு செய்யும் சட்டம் 1971 | பிரிவு 7(3) | இச்சட்டத்தில் குறிப்பிட்டுள்ள விதிகளை மீறுதல் | -- | ரூ. 1000 |
| | | பிரிவு 23 | நுண்ணறிவு கருவியை பயன்படுத்தும் மருத்துவர், ஆய்வுக்கூடத்தை நடத்துபவர் ஆகியோர் இச்சட்டத்தில் குறிப்பட்டுள்ள விதிகளை மீறும் போது | 3 வருடம் முதல் (முதல் குற்றம்) | ரூ. 10,000 |
| | | பிரிவு 23 (2) | குற்றம் புரிந்த மருத்துவரின் பெயர் மாநில மருத்துவ கழகத்தின் பதிவேட்டிலிருந்து கீழ்க்கண்டவாறு நீக்கப்படும். | 2 வருடம் (முதல் குற்றம்)<br>2ம் குற்றம் மற்றும் அதற்கு மேல் பெயர் நிரந்தரமாக நீக்கப்படும் | |
| | | பிரிவு 23(3) | குழந்தை ஆணா, பெண்ணா என்ற தகவலை கூறும்படி வற்புறுத்தும் நபர் (கருவுற்ற பெண்ணாக இருக்கும் பட்சத்தில் அவர் எத்தகைய நிர்பந்தத்திற்கும் ஆளாகாமல் இருந்தால்) | 3 வருடம் (முதல் குற்றம்) | ரூ. 10,000 |
| | | | | 5 வருடம் - (2ம் குற்றம் மற்றும் அதற்கு மேல்) | ரூ. 50,000 |
| | | பிரிவு 24 | குழந்தையின் பாலினத்தை அறிய முடியும் என விளம்பரப்படுத்துதல். | 3 வருடம் | ரூ. 10,000 |
| | | பிரிவு 25 | சில விதிகளை மீறும் இதர நபர்கள் தொடர் விதி மீறல்கள் நடைபெறின் முதல் தண்டனை பெற்ற நாளில் இருந்து, நாட்கணக்கில் அபராதம் விதிக்கப்படும். | 3 மாதம் | ரூ. 1000 (நாளொன்றுக்கு ரூ. 5000 வரை இருக்கலாம்) |
| 8 | இளம் பருவத்தினருக்கு (ஊறுவிளைவிக்கக் கூடிய அச்சுப் பிரதிகள்) சட்டம் 1956 | | இளைஞர்களுக்கு ஊறுவிளைவிக்கக்கூடிய அச்சுப்பிரதிகள் விற்பது. | 6 மாதம் | அபராதம் (இரண்டும்) |

| வ. எண் | சட்டம் | சட்டப்பிரிவு | குற்றங்கள் | தண்டனை விபரங்கள் | |
|---|---|---|---|---|---|
| | | | | சிறை | அபராதம் |
| | இந்திய தண்டனைச் சட்டம் | பிரிவு 376 | பாலியல் பலாத்காரம், 16 வயதுக்குட்பட்ட பெண்ணின் கணவர் தவிர இதர நபர் அப்பெண்ணின் சம்மதத்துடனோ அல்லது சம்மதமின்றியோ உடலுறவு கொள்வது, ஒரு பெண்ணின் கணவராக இருந்தபோதும், 15 வயதுக்குட்பட்ட பெண்ணுடன் உடல் உறவு கொள்ளுதல் | 7 வருடம் முதல் 14 வருடம் வரை | அபராதம் (இரண்டும்) |
| 6 | விபச்சாரக் கடத்தல் (தடுக்கும்) சட்டம் 1958 | பிரிவு 377 | இயற்கைக்கு புறம்பான முறையில் பாலியல் உறவு கொள்வது | ஆயுள் அல்லது 10 வருடம் | அபராதம் (இரண்டும்) |
| | | பிரிவு 3 | விபச்சார விடுதி நடத்துதல், ஒரு இடத்தில் விபச்சாரம் நடைபெற அனுமதித்தல் | 5 வருடம் | ரூ. 2000 |
| | | பிரிவு 4 | ஒரு நபரை விபச்சாரத்திற்காக பயன்படுத்தி அதன் மூலம் வரும் வருவாயில் வாழும் 18 வயதுக்கு மேற்பட்டவர் | 2 வருடம் | ரூ. 1000 |
| | | பிரிவு 5 | விபச்சாரத்தில் ஈடுபடுத்தும் நோக்குடன் ஒரு நபரை அழைத்து வருதல், கடத்தி வருதல் | 3 முதல் 7 வருடம் | ரூ. 2000 |
| | | | ஆள் பிடித்தல் சம்மந்தப்பட்ட நபரின் சம்மதமின்றி கடத்தி வருதல் | 7 வருடம் முதல் 14 வருடம் | -- |
| | | பிரிவு 6 | ஒரு நபரை விபச்சாரத்தில் ஈடுபடுத்தும் நோக்குடன் ஒரு விடுதியில் இருத்தி வைத்தல், அடைத்து வைத்தல், ஒரு குழந்தையை விபச்சார விடுதியில் வைத்திருத்தல், பாலியல் பலாத்காரத்திற்கு ஆட்படுத்தப்பட்ட குழந்தை விபச்சார விடுதியில் இருத்தி வைத்திருத்தல் | 7 முதல் ஆயுட்காலம் வரை | அபராதம் |
| | | பிரிவு 7 | பொது இடத்தில் விபச்சாரத்தில் ஈடுபடும் இரு தரப்பினருக்கும் | 3 மாதம் வரை | ரூ. 1000 |
| | | | ஒரு மைனர் ஈடுபடுத்தப்பட்டிருந்தால் குற்றம் செய்பவருக்கு | 7 வருடம் முதல் ஆயுட்காலம் வரை | ரூ. 1000 |



### அத்தியாயம் 1

# குழந்தைகளின் உரிமைகள்

**நோக்கம்**




- குழந்தைகளின் உரிமைகளை அறிதல்.
- ஐ.நாவின் குழந்தைகளின் உரிமைகள் மீதான உடன்படிக்கையை அறிதல்.
- ஐ.நா. வரையறுத்துள்ள குழந்தைகளின் உரிமைகளை அறிதல்.

## குழந்தைகளின் உரிமைகள்

மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவது ஒரு சமுதாயத்தின் தலையாய கடமை. ஆனால், தங்களுக்கும் உரிமை உண்டு என தெரியாது, உரிமைகள் மறுக்கப்படும்போது அதை எதிர்த்து போராட திராணியற்றவர்கள் குழந்தைகளே! குழந்தைகளின் உரிமைகளை அவர்களுக்கு தெரிவிப்பதும், குழந்தைகளின் உரிமைகளை பாதுகாக்கும் பொறுப்பும், கடமையும் குழந்தைகளின் பெற்றோர், அரசு மற்றும் சமுதாயம் ஆகிய நம் அனைவருக்குமே உள்ளது.

## குழந்தைகளின் உரிமைகள் மீதான உடன்படிக்கை

மனித உரிமைகள் குறித்து பெரிதும் பேசப்படுகின்ற இன்றைய சூழ்நிலையில் குழந்தைகள் பராமரிப்பு என்பது குழந்தைக்கு செய்யப்படும் சேவையாக மட்டுமின்றி குழந்தையின் உரிமையாகவே கருதப்பட வேண்டும். குழந்தைகளுக்கென்ற உலகம் சிறப்பான ஒன்று. குழந்தைகளுக்கென்ற தேவைகள் தனியானவை. இத்தகைய தேவைகளை நிறைவேற்ற மிக முக்கியமானவை குழந்தைகளின் உரிமைகளே. தங்கள் உரிமைகள் பறிபோகிறது என்பதை உணர முடியாத பருவத்தில் குழந்தைகள் இருப்பதினால், எளிதில்

பிரச்சனையில் உட்படுகிறார்கள். அவ்வாறு பிரச்சனைகளுக்கு உட்படும் குழந்தைகளின் எதிர்காலம் சூன்யமாக இருக்கிறது. எனவே, குழந்தைகளுக்கு சிறப்பு உதவிகள் தேவை. குழந்தை உரிமைகளை மனித உரிமைகளில் இருந்து பிரித்து சமுதாயத்திற்கும், அரசுக்கும் தெரிவிக்க வேண்டியது குழந்தைகள் மேம்பாட்டிற்கு அவசியம். குழந்தைகளுக்கு என்று உரிமைகள் பொதுவாக இருந்தால் தான், உரிமைகளைக் கேட்டுப் பெறலாம். உரிமைகள் மீறப்பட்டால் தீர்வு காணலாம். இவற்றை அடிப்படையாக கொண்டு குழந்தைகளின் உரிமைகள் மீதான உடன்படிக்கை 1989-ம் ஆண்டு நவம்பர் மாதம் 20-ம் நாள் ஐக்கிய நாடுகள் சபையில் பொதுக்குழுவால் ஏற்றுக்கொள்ளப் பட்டது.

தற்போது ஒன்றிரண்டு நாடுகள் தவிர அனைத்து உறுப்பு நாடுகளின் ஒப்புதலையும் பெற்றுள்ளது. 54 ஷரத்துக்களைக் கொண்ட இந்த உடன்படிக்கை குழந்தைகளின் உரிமைகளை கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தி உள்ளது:

- குழந்தைகளின் வாழும் உரிமைகள்.
- பாதுகாப்பு உரிமைகள்.
- வளர்ச்சிக்கான உரிமைகள்.
- பங்கேற்கும் உரிமைகள்.

இவை உலகம் முழுவதாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு சர்வதேச சட்டமாகும்.

குழந்தைகள் பிறந்தவுடன் தனக்கென ஒரு பெயர், ஒரு நாட்டின் குடியுரிமை ஆகியவற்றை பெறும் உரிமை உண்டு. குழந்தைகளை நல்ல முறையில் வளர்க்கும் தலையாய கடமை பெற்றோருடையது. பெற்றோர்கள் தங்கள் கடமையை செவ்வனே நிறைவேற்ற உறுதுணையாக இருக்க வேண்டியது அரசு. ஆரோக்கியமான சூழலில் வாழ, கல்வி கற்க, வன்முறைகள் மற்றும் சுரண்டல்களில் இருந்து பாதுகாக்கப்பட பேச்சுரிமை, பங்கேற்பு உரிமை, மதம், கலாச்சாரம் ஆகியவற்றில் சுதந்திரம் ஆகிய பல கருத்துக்கள் இந்த உடன்படிக்கையில் தெளிவாக தெரிவிக்கப்பட்டுள்ளன.

இதில் கூறப்பட்டுள்ள இத்தகைய உரிமைகளை குழந்தைகள் பெறுவதற்கான நடைமுறை கண்காணிப்பு வழிமுறைகளும் தெளிவாக



| வ. எண் | சட்டம் | சட்டப்பிரிவு | குற்றங்கள் | தண்டனை விபரங்கள் | |
|---|---|---|---|---|---|
| | | | | சிறை | அபராதம் |
| | இந்திய தண்டனைச் சட்டம் | பிரிவு 363 | சட்டப்படி உரிமை பெற்ற பாதுகாவலரின் வசமிருந்த 16 வயதுக்குட்பட்ட ஆண் அல்லது 18 வயதுக்குட்பட்ட பெண் ஆகியோரை உள்நாட்டிலோ அல்லது வெளிநாட்டிலோ கடத்தி செல்லுதல் | 7 வருடம் | அபராதம் |
| | | பிரிவு 363 (A) | பிச்சை எடுக்கப் பயன்படுத்தும் நோக்கத்துடன் ஒரு குழந்தையை கடத்துவது அல்லது பாதுகாவலரிடமிருந்து பெறுவது | 10 வருடம் | அபராதம் |
| | | பிரிவு A(2) | பிச்சை எடுக்க பயன்படுத்தும் நோக்கத்துடன் ஒரு குழந்தையை ஊனமாக்குவது | ஆயுள் தண்டனை | அபராதம் |
| | | பிரிவு 366 A | 18 வயதுக்குட்பட்ட ஒரு பெண்ணின் மனதை கலைத்து இதர நபர்களுடன் பாலியல் உறவு கொள்ளும்படி ஊக்குவிப்பது | 10 வருடம் | அபராதம் |
| | | பிரிவு 366 B | விபச்சாரத்திற்காக 21 வயதுக்குட்பட்ட பெண்களை அயல்நாடுகளிலிருந்து அழைத்து வருதல் | 10 வருடம் | அபராதம் |
| | | பிரிவு 367, 368 | கடத்தல், அடிமைப்படுத்துதல், இயற்கைக்கு புறம்பாக பாலியல் உறவு கொள்ள விழையும் நபர்களிடம் கடத்தப்பட்ட நபரை விடுதல் | 10 வருடம் | அபராதம் |
| | | பிரிவு 369 | 10 வயதுக்குட்பட்ட ஒரு குழந்தையின் வசமுள்ள சொத்தை திருடும் நோக்குடன் குழந்தையை கடத்துவது | 7 வருடம் | அபராதம் |
| | | பிரிவு 372 | விபச்சாரத்திற்காக விற்றல் | | |
| | | பிரிவு 373 | இளம்பிராயத்தினரை விபச்சாரத்தில் ஈடுபடுத்தும் நோக்குடன் வாங்குவது | 1 வருடம் | அபராதம் |
| | | பிரிவு 374 | சட்டத்திற்கு புறம்பாக ஒரு நபரை கட்டாயப்படுத்தி வேலை வாங்குவது | 1 வருடம் | அபராதம் (இரண்டும்) |

| வ. எண் | சட்டம் | சட்டப்பிரிவு | குற்றங்கள் | தண்டனை விபரங்கள் | |
|---|---|---|---|---|---|
| | | | | சிறை | அபராதம் |
| | | பிரிவு 15 | ✦ சட்டப்பிரிவு 169 - கப்பல் வழி வியாபாரச்சட்டம் 1958<br>✦ சட்டப்பிரிவு 21 - வாகனப்போக்குவரத்து தொழிலாளர் சட்டம் 1961 | | |
| 4 | கொத்தடிமை முறை (ஒழிப்பு சட்டம்) 1976 | பிரிவு 16 | ✦ கொத்தடிமையாக வைத்திருத்தல்<br>✦ கொத்தடிமைப்படுத்தும் நோக்கில் கடன் கொடுத்தல்<br>✦ அடிமைப்படுத்தி வேலை வாங்குதல் | 3 வருடம் | ரூ. 2000 |
| 5 | இந்திய தண்டணைச்சட்டம் | பிரிவு 312 | உரிய காரணமின்றி கருக்கலைப்பது | 3 வருடம் | அபராதம் |
| | | பிரிவு 313 | தாயின் சம்மதமின்றி கருக்கலைப்பது | ஆயுள் தண்டனை /10 வருடம் | அபராதம் |
| | | பிரிவு 314 | சட்டத்துக்கு புறம்பான கருக்கலைப்பு செய்து அதன் வாயிலாக தாய் மரணமடைதல் | 10 வருடம் (பெண்ணின் சம்மதம் இல்லையெனில் ஆயுள் தண்டனை | அபராதம் |
| | | பிரிவு 315 | ஒரு குழந்தை உயிருடன் பிறத்தலை தடுப்பது அல்லது உயிருடன் பிறந்த குழந்தையை கொல்வது | 10 வருடம் | அபராதம் |
| | | பிரிவு 316 | கர்ப்பணிப் பெண் மீது கொலை முயற்சி செய்து அதன் மூலம் கருவிலுள்ள குழந்தை இறக்க நேர்தல் | 10 வருடம் | -- |
| | | பிரிவு 317 | தங்கள் பாதுகாப்பில் இருக்கும் 12 வயதுக்குட்பட்ட குழந்தையை அனாதையாக கைவிடுதல் (பெற்றோர் மற்றும் இதர பாதுகாவலர்கள்) | 7 வருடம் | அபராதம் |
| | | பிரிவு 318 | குழந்தை பிறப்பை மறைக்கும் நோக்கத்தில் இறந்து பிறந்த (அ) பிறந்து இறந்த குழந்தையை மறைத்தல் | 2 வருடம் | அபராதம் |



இதில் கூறப்பட்டுள்ளன. ஐக்கிய சபையின் உறுப்பு நாடுகள் ஒவ்வொன்றும் தங்கள் நாட்டுக் குழந்தைகளின் உரிமைகள் முழுமையாக அடைவதற்கு எடுத்து வரும் நடவடிக்கைள் குறித்து அவ்வப்போது ஐ.நா.சபைக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

ஐ.நா.சபையால் நியமிக்கப்பட்ட ''**கண்காணிப்பு குழு**'' உறுப்பு நாடுகள் சமர்ப்பிக்கும் இந்த அறிக்கைகளை பரிசீலிக்கும். இந்த கண்காணிப்பு குழுவிற்கு இந்த அறிக்கைகளை அதன் உறுப்பினர்கள் தனிப்பட்ட முறையில் ஆய்வு செய்யவும், தொண்டு நிறுவனங்களின் கருத்துக்களை அறியவும் முழு உரிமையுண்டு. மேலும், உறுப்பு நாடுகளின் அறிக்கைகளை பரிசீலித்து தங்கள் ஆய்வறிக்கைகளை ஐ.நா.சபைக்கு சமர்ப்பிக்கும் பொறுப்பும் இந்த குழுவுக்கு உண்டு.

இந்திய அரசு 1992-ம் ஆண்டு டிசம்பர் 11ம் நாள் 167 நாடுகளுடன் இந்த உடன்படிக்கையில் கையொப்பமிட்டது. இதன் மூலம், நம் நாட்டுக் குழந்தைகளுக்கு இந்த ஒப்பந்தத்தில் கூறியுள்ள உரிமைகளை வழங்கும் பொறுப்பு நம் அரசாங்கத்துக்கு உண்டு.

இந்நிலையில், நம் அரசியல் சாசனமும், சட்டங்களும் குழந்தைகளின் உரிமைகளை பற்றி தெரிவிக்கும் கருத்துக்களை குழந்தைகளின் நலனிற்கான பணியில் ஈடுபடும் நாம் தெரிந்து குழந்தைகளுக்கு எடுத்துரைப்பது இன்றியமையாதது.

## நடைமுறை செயல்பாடு

- **உங்களது அடிப்படை உரிமைகள் என்னென்ன?**
- **உங்களில் யாருக்காவது இத்தகைய உரிமைகள் மறுக்கப்படும் போது என்ன செய்யலாம்?**
- **உரிமைகளையும் கடமைகளையும் வித்தியாசப்படுத்தவும்.**



*அத்தியாயம் 2*

# இந்தியாவில் குழந்தைகளின் நிலை

### நோக்கம்

- நம் நாட்டில் குழந்தைகளின் நிலை அறிதல்.
- குழந்தைகளின் வளர்ச்சிக்கு தடைக்கற்களாக உள்ள காரணிகளை அறிதல்.
- நம் நாட்டில் ஆதரவும் பாதுகாப்பும் தேவைப்படும் குழந்தைகளை அறிதல்.

உலகில் மிகப்பெரிய ஜனநாயக நாடு என்ற பெருமையைக் கொண்ட நம் நாடு, உலகிலேயே அதிக எண்ணிக்கையிலான குழந்தைகளை கொண்டது என்ற பெருமையையும் கொண்டது. நம் நாட்டின் பத்தாவது ஐந்தாண்டு திட்டம் (2002-2007) இந்தியாவின் எதிர்காலம் இந்திய குழந்தைகளின் எதிர்காலத்தில் தான் உள்ளது என கூறுகிறது. நம் நாட்டின் மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கு 18 வயதிற்கு உட்பட்ட குழந்தைகளே.

### குழந்தைகளின் எண்ணிக்கை

2001-ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பன் படி, 157.86 மில்லியன் குழந்தைகள் 6 வயதுக்குட்பட்டவர்கள். இது ஒட்டு மொத்த மக்கள் தொகையில் 15.42%. இதில் 75.95 மில்லியன் பெண் குழந்தைகள்; 81.91 மில்லியன் குழந்தைகள் ஆண் குழந்தைகள்.

2001-ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பன் படி, 0-6 வயதில் பாலின விகிதம் 1000 ஆண் குழந்தைகளுக்கு 927 பெண் குழந்தைகளாகும்.

பெரும்பான்மையான இத்தகைய குழந்தைகளின் வளர்ச்சி தாங்கள் வாழும் சமூக, பொருளாதார சூழ்நிலைகளினால் தடைபடுகிறது. இத்தடைகளில் குறிப்பிடத்தக்கவை வறுமை, சுற்றுப்புற சீர்கேடு, நோய்கள், நோய்தொற்றுகள், ஆரம்ப சுகாதார வசதியின்மை, போதிய குழந்தை பராமரிப்பு மற்றும் ஊட்டச்சத்தின்மை போன்றவை.



| வ. எண் | சட்டம் | சட்டப்பிரிவு | குற்றங்கள் | தண்டனை விபரங்கள் | |
|---|---|---|---|---|---|
| | | | | சிறை | அபராதம் |
| 1 | இந்து திருமண சட்டம் | பிரிவு 5 III | ✦ 21 வயதுக்குட்பட்ட ஆண் மற்றும் பெண் ஆகியோருக்கு திருமணம் | 15 நாட்கள் | ரூ. 1000 |
| 2 | பாலிய விவாக தடைச் சட்டம் | பிரிவு (3) | ✦ 18 வயதிலிருந்து 21 வயது நிரம்பாத ஆண்மகன் 18 வயதுக்குட்பட்ட சிறுமியை மணக்கும்போது | 15 நாட்கள் | ரூ. 1000 (அ) இரண்டும் |
| | | பிரிவு (4) | ✦ 21 வயது நிரம்பிய ஆண்மகன் 18 வயது நிரம்பாத சிறுமியை மணந்தால் | 3 மாதம் | அபராதம் |
| | | பிரிவு (5) | ✦ குழந்தை திருமணம் நடத்தி வைக்கும் புரோகிதர் மற்றும் இதர நபர் | 3 மாதம் | அபராதம் |
| | | பிரிவு (6) | ✦ குழந்தை திருமணத்தை நடத்தி வைத்த; நடக்க அனுமதித்த; கவனக்குறைவு காரணமாக தடுக்கத் தவறிய பெற்றோர் அல்லது பாதுகாவலர் | 3 மாதம் | அபராதம் |
| 3 | குழந்தை தொழிலாளர் (தடுத்தல் மற்றும் முறைப்படுத்துதல் சட்டம் 1986) | பிரிவு 14 (1) | ✦ தடை செய்யப்பட்ட தொழில் துறைகளில் குழந்தையை வேலைக்கு அமர்த்துதல் | 3 மாதம் முதல் 1 வருடம் வரை | ரூ. 1000 முதல் ரூ. 2000 வரை |
| | | பிரிவு 14 (3) | ✦ மேற்சொன்ன தண்டனை பெற்றவர் மீண்டும் அதே குற்றம் புரியும்போது | 7 வருடம் முதல் 2 வருடம் வரை | அபராதம் |
| | | பிரிவு 14 (3) | ✦ சட்டப்பிரிவுகள் 9, 11, 12-ல் குறிப்பிட்டுள்ளபடி செயல்படாதவர் மற்றும் வேறு சில சட்ட அம்சங்களை மதிக்காதவர் | 1 மாதம் | ரூ. 1000 |
| | | பிரிவு 15 | கீழ்க்கண்ட சட்டப்பிரிவுகள்படி குற்றவாளியாக நிருபிக்கப்படுபவர்: ✦ சட்டப்பிரிவு 67 - தொழிற்சாலைச்சட்டம் 1948 ✦ சட்டப்பிரிவு 40 - சுரங்கத்தொழிலாளர் சட்டம் 1952 | 3 மாதம் முதல் 1 வருடம் வரை | ரூ. 1000 முதல் ரூ. 2000 வரை |

### குழந்தைகள் கடத்தப்படும் முறைகளும் நோக்கங்களும்

**உழைப்பிற்காக**

- கொத்தடிமைத்தொழில்.
- வீட்டு வேலை.
- விவசாய வேலை.
- கட்டுமானப் பணி.
- ஜமுக்காளத் தொழில், ஆயத்த ஆடைத்தொழில், மீன்/இறால் ஏற்றுமதி மற்றும் முறையான மற்றும் முறைசாரா பொருளாதார தொழில்கள்.




**சட்டத்திற்கு எதிரான செயல்பாடுகள்**

- பிச்சையெடுக்க வைத்தல்.
- மனித உடலுறுப்புகளை விற்றல்.
- போதை மருந்துகளை விற்க மற்றும் கடத்த.

**பாலியல் சுரண்டலுக்காக**

- பலவந்தமாக விபச்சாரத்தில் ஈடுபடுத்துதல்.
- சமூக மற்றும் மத அடிப்படையில் புனிதமாகக் கருதப்படும் விபச்சாரங்கள்.
- பாலியல் சுற்றுலா மற்றும் நிர்வாண புகைப்படம் எடுத்தல்.

**பொழுது போக்கு மற்றும் விளையாட்டுகளுக்காக**

- சர்க்கஸ், நடன குழுக்கள் மற்றும் பிற.
- ஒட்டகப் பந்தயத்திற்காக.
- திருமணத்திற்காகவும், அதன் பெயராலும்.
- தத்தெடுக்கவும், அதன் பெயராலும்.

### நடைமுறை செயல்பாடு

- **உங்கள் ஊரில் குழந்தைகள் காணவில்லை என்று எப்போதாவது நீங்கள் அறிந்தது உண்டா?**
- **குழந்தைகள் காணவில்லை என்றால் நாம் செய்ய வேண்டியது என்ன?**
- **செய்தித்தாள்களில் குழந்தைகள் கடத்தப்படுதலைப் பற்றிய செய்திகளைப் பார்த்தது உண்டா?**



### இந்தியாவில் குழந்தைகளின் நிலை:

- இந்தியாவில் பாதுகாப்பும் அரவணைப்பும் தேவைப்படும் குழந்தைகள் உலகிலேயே அதிக எண்ணிக்கையில் (35%) பிறந்த குழந்தைகளின் இறப்பு இந்தியாவில் உள்ளது.
- 40% இந்திய குழந்தைகள் வளரும் நாடுகளில் உள்ள குழந்தைகளில் ஊட்டச்சத்து குறைபாடு உடையவர்கள்.
- 50% குழந்தை இறப்பு விகிதம் இந்தியாவில் உள்ளது.
- 0-6 வயதிலான வயதில் பெண் குழந்தைகளின் எண்ணிக்கை மிகவும் குறைந்துள்ளது. (1000 ஆண் குழந்தைகளுக்கு 927 பெண் குழந்தைகள்)
- 46% குழந்தைகள் பழங்குடி இன வகுப்பை சார்ந்தவர்கள் (ST).
- பிற்படுத்தப்பட்ட வகுப்பை (SC) சார்ந்த 38% குழந்தைகள் பள்ளிப்படிப்பை இழந்தவர்கள்.
- உயர்நிலை கல்வியை பாதியில் விடும் பெரும்பான்மையோர் பெண் குழந்தைகளே.
- இந்தியாவில் குழந்தைகள் திருமணம் அதிகமாக நடைபெறுகிறது.
- அதிக அளவிலான குழந்தைத் தொழிலாளர்களின் எண்ணிக்கை இந்தியாவில் உண்டு.
- அதிக அளவிலான குழந்தைகள் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்படுகிறார்கள்.
- அனாதைகள், கைவிடப்பட்டோர் மற்றும் ஆதரவற்றோர்
- தொலைந்து போன மற்றும் குடி பெயர்ந்த குழந்தைகள்.
- சாலைவாழ் மற்றும் குழந்தைத் தொழிலாளர்கள்.
- பாலியல் தொழில் செய்வோரின் குழந்தைகள்.
- பாலியல் வன்முறைக்கு உட்படும் குழந்தைகள்.
- போதைப்பழக்கத்திற்கு அடிமையாகும் குழந்தைகள்.
- ஹெச்.ஐ.விஃ எய்ட்ஸினால் பாதிக்கப்பட்ட குழந்தைகள்.
- இயற்கை மற்றும் மக்களால் ஏற்படுகின்ற பேரிடர்களால் பாதிக்கப்பட்ட குழந்தைகள்.
- ஊனத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகள்.
- பிச்சை எடுக்கும் குழந்தைகள்.
- கடுமையான நோயினால் தாக்குண்ட குழந்தைகள்.

**நடைமுறை செயல்பாடு**

- இந்தியாவின் இத்தகைய குழந்தைகளின் நிலைக்கு காரணங்கள் யாவை?
- சமீபத்தில் குழந்தைகளுக்கெதிரான வன்முறைகள் நடப்பவை பற்றி அறிந்திருக்கிறீர்களா?
- மேலே குறிப்பிடப்பட்ட குழந்தைகள் உங்கள் ஊரில் இருந்தால் நீங்கள் எவ்வாறு அவர்களுக்கு உதவலாம்?
- குழந்தைகள் குழுவின் நன்மைகள் யாவை?







**அத்தியாயம் 6**

# குழந்தைகள் கடத்தல்

**நோக்கம்**

- குழந்தைகள் கடத்தல் பற்றி தெரிதல்.
- குழந்தைகள் கடத்தலுக்கான காரணங்களை அறிதல்.

ஒவ்வொரு ஆண்டும் 44000 குழந்தைகள் காணாமல் போவதாக பதிவுகள் செய்யப்படுகின்றன. அவற்றில் 22% மட்டுமே கண்டறியப்படுகின்றன. இந்தியாவில் 4 லட்சம் குழந்தைகள் விபச்சாரத் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். ஒவ்வொரு வருடமும் 1 லட்சம் குழந்தைகள் அதன் பால் ஈர்க்கப்படுகிறார்கள். 100 மில்லியன் குழந்தைகள் பல்வேறு வித முறைகளில் தொழிலாளர்களாக உள்ளனர். திருமணம் மற்றும் தத்தெடுத்தல் என்ற பெயரில் எண்ணற்ற கொடூரங்கள் நடைபெறுகின்றன. எண்ணற்ற குழந்தைகள் சாதாரண பொருட்களைப் போல விற்க மற்றும் வாங்கப்படுகிறார்கள். குழந்தைகள் கடத்தப்படுதல் என்பது குழந்தைகளின் உரிமைகளை மறுக்கும் ஒரு கொடூர செயலாகும்.

## குழந்தைகள் கடத்தப்படுதல் என்றால் என்ன?

சுரண்டலுக்கு வழிவகுக்கும்/ஆளாக்கும் என்று தெரிந்தும் அத்தகைய நோக்குடனும், 18 வயதுக்குட்பட்ட குழந்தைகளை அச்சுறுத்தியோ, பலவந்தமாகவோ, பிற வகையான வன்முறையை கையாண்டோ, ஏமாற்றியோ, கடத்தியோ, அதிகார துஷ்பிரயோகம் செய்தோ, இன்னலுக்கு ஆளாகும் நிலையை பயன்படுத்தியோ, ஒருவரது அனுமதியைப் பெறும் பொருட்டு பணம் அல்லது பயன்களைக் கொடுத்தோ அல்லது பெற்றுக்கொண்டோ, சட்டத்திற்கு உட்பட்டோ அல்லது சட்டத்திற்கு புறம்பாகவோ ஒரு நாட்டின் எல்லைக்குள் அல்லது எல்லைக்கு அப்பால் ஆள்சேர்த்தல், கொண்டு செல்லுதல், இடம் பெயர்தல், தங்க வைத்தல் அல்லது பெறுதல் குழந்தைக் கடத்தலாகும்.

- இது ஐக்கிய நாடுகளின் மருந்துகள் கட்டுப்பாடு மற்றும் குற்றத்தடுப்பு அலுவலகம் (UNODC) ஏற்றுக் கொண்ட வரையறையாகும்.

- *குற்றம்புரிந்த குழந்தைகளுக்காக ஏற்படுத்தப்பட்டுள்ள இல்லங்களில் 18 வயது வரை பள்ளிப்படிப்பு மற்றும் தொழில் படிப்பு பெற வழிவகை செய்தல்.*
- *குற்றம்புரிந்தவர் 17 வயது நிரம்பியவராக இருப்பின் குறைந்த பட்சம் 2 வருடம் மேற்கூறிய பள்ளியில் இருக்க பணித்தல்.*
- *குற்றம்புரிந்தவர் 16 வயதுக்குட்பட்டவராக இருந்தால் அவரை 18 வயது வரை வேறு பாதுகாப்பான இடத்தில் நிறுத்தி வைக்க ஆணையிடல்.*

**நடைமுறை செயல்பாடு**

- **இளவயதில் குழந்தைகள் குற்றவாளிகளாக காரணங்கள் என்ன?.**
- **இளவயது குற்றவாளிகளுக்கு தேவைப்படும் குணநலன்கள்/ திறன்கள் யாவை?**
- **உங்கள் மாவட்டத்தில் கூர்நோக்கு இல்லம் எங்கு உள்ளது? உங்கள் மாவட்டத்தில் இளைஞர்கள் நலக்குழுமத்தின் உறுப்பினர்கள் யார்? யார்?**
- **இளவயது குற்றவாளிக்கு தன்னோடு ஒத்த குழந்தைகள் செய்ய வேண்டிய உதவிகள்/செயல்கள் என்ன?**





**அத்தியாயம் 3**

# இந்திய அரசியல் சாசனம் மற்றும் குழந்தைகள்

**நோக்கம்**

- இந்திய அரசியல் சாசனத்தை அறிதல்.
- குழந்தைகளின் பாதுகாப்பிற்கான முக்கியத்துவம் வாய்ந்த இந்திய அரசியல் சாசனத்தின் கோட்பாடுகளை அறிதல்.



நம் குடிமக்கள் அனைவருக்கும் சமுதாய, பொருளாதார, அரசியல் நீதி வழங்கவும், சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவத்தின் அடிப்படையில் ஒரு சமதர்ம சமுதாயத்தினை அமைப்பதும் இந்திய அரசியல் சாசனத்தின் முக்கிய நோக்கங்கள் ஆகும்.

இந்திய மண்ணில் பிறந்த அல்லது ஒவ்வொரு இந்திய குடிமகனுக்கும் குடியுரிமை உண்டு என்று இந்திய அரசியல் சாசனம் கூறுகிறது. மேலும், குடியுரிமை பெற்ற அனைத்து குழந்தைகளுக்கும் அடிப்படை உரிமைகள் உள்ளது. குழந்தைகளுக்கு தேவையான பாதுகாப்பு, ஆக்கிரமிப்பு, அதிகாரம், சுரண்டல் போன்றவற்றிலிருந்து குழந்தைகளை பாதுகாப்பது குறித்த பல்வேறு கொள்கைகள் இந்திய அரசியல் சாசனத்தில் உள்ளன.

- *சட்டத்தின் முன் அனைவரும் சமம் என நமது அரசியல் சாசனத்தின் 14-வது கோட்பாடு கூறுகிறது.*
- *சாதி, சமயம், இனம், பால், பிறப்பிடம் போன்ற எந்த காரணத்திற்காகவும் பாகுபாடு காட்டுதல் கூடாது என நமது அரசியல் சாசனத்தின் 15-வது கோட்பாடு கூறுகிறது.*

- மேலும், நம் சமுதாயத்தில் உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையில் வாழும் குழந்தைகள் மற்றும் பெண்கள் நலனுக்கென சிறப்பு சலுகைகளும், சட்டங்களும் இயற்ற கோட்பாடு 15(3) அரசிற்கு அனுமதி அளிக்கிறது.
- மனிதர்களை விற்பது, வாங்குவது, வற்புறுத்தி வேலை வாங்குவது, பிச்சை எடுக்க செய்வது ஆகியவை தண்டிக்கப்பட வேண்டிய குற்றங்கள் என கோட்பாடு 23 கூறுகிறது.
- கோட்பாடு 24, 14 வயதிற்குட்ட குழந்தைகள் குழந்தைத் தொழிலாளர்கள்ர்களாக பணிபுரிவதை வன்மையாக கண்டிக்கிறது.
- குழந்தைகள் சுதந்திரமான சூழலில் கண்ணியத்துடன் வாழ வாய்ப்பு அளிக்கவும், இளைஞர்கள் சுரண்டப்படுவதிலிருந்தும், ஒழுக்கம் மற்றும் பொருளாதார காரணங்களால் நிராதரவாக விடப்படுவதிலிருந்து காப்பாற்றவும் கோட்பாடுகள் 30-E&F வலியுறுத்துகின்றன.
- கோட்பாடு 45, 14 வயதிற்குட்பட்ட இந்திய குழந்தைகள் அனைவருக்கும் இலவச கட்டாய கல்வியை வலியுறுத்துகிறது.
- கோட்பாடு 46, பிற்படுத்தப்படுத்தப்பட்ட மக்களிடையே குறிப்பாக தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மக்களின் கல்வி, பொருளாதாரம் ஆகியவற்றில் அதிக கவனம் செலுத்த வழிவகை செய்கிறது.
- சமீபத்திய 93-வது அரசியல் திருத்த மசோதா கல்வி கற்பது 14 வயது நிரம்பாத குழந்தைகளின் அடிப்படை உரிமை என வலியுறுத்துகிறது.

### நடைமுறை செயல்பாடு

- **இந்திய அரசியல் சாசனத்தில் குழந்தைகளின் பாதுகாப்பிற்காக இத்தனை கோட்பாடுகள் இருந்தும், குழந்தைகளுக்கு போதிய பாதுகாப்பு மற்றும் ஆதரவு இல்லை-விவாதிக்கவும்.**
- **புதிதாக அரசியல் சாசனத்தில் ஏதேனும் மாற்றங்கள் தேவையா-விவாதிக்கவும்.**



- அவர் குற்றம் புரிந்தது நிரூபிக்கப்பட்டால், அவர் அத்தகைய செயலில் ஈடுபடுவதற்கான சூழ்நிலை, மனநிலை, காரணம் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து அவர் மனந்திருந்தி வாழ சூழ்நிலை ஏற்படும் வகையில் தண்டனை அமையும்.
- இளங்குற்றவாளிகளை இளைஞர் நீதிக்குழுமம் மட்டுமே விசாரிக்க வேண்டும். சாதாரண குற்றவியல் நீதிமன்றங்கள் விசாரிக்கக்கூடாது.
- இளைஞர் நீதிக்குழுமம் ஒரு முதன்மை நீதிபதியை தலைவராகவும், சமூக சேவை, குழந்தை நலம் ஆகியவற்றில் பயிற்சி பெற்ற இருவரை அங்கத்தினராகவும் கொண்டிருக்கும். குழுமத்தில் உள்ள அனைவருக்கும் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தில் மேஜிஸ்டிரேட்டுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் உண்டு.

### இளைஞர் நீதிக்குழுமத்தின் ஆரம்ப கட்ட நடவடிக்கைகள்

- வயது பரிசீலனை
- காவல்துறை, சிறைச்சாலை ஆகிய இடங்களில் குழந்தைகள் வைக்கப்படவில்லை மற்றும் குறிப்பட்ட நேரத்திற்குள் குழந்தை கொண்டுவரப்பட்டதா என விசாரித்தல்.
- குழந்தையிடம் நேர்முக விசாரணை.
- நன்னடத்தை அதிகாரியிடம் இடைக்கால அறிக்கை.
- பெயிலில் விடல்.
- அரசு கூர்நோக்கு இல்லங்களுக்கு அனுப்புதல்.

### இளைஞர் நீதிக்குழுமத்தின் தீர்ப்பு முறைகள்

- தீர்ப்பு வழங்கும் முன் நன்னடத்தை அதிகாரியின் அறிக்கை பெறல்.
- பெரும்பான்மையோர் கருத்துப்படியே தீர்ப்பு வழங்கப்பட வேண்டும்.
- புத்திமதி, ஆலோசனை, கண்டிப்பு போன்றவற்றை கடைப்பிடித்து குழந்தையை பெற்றோர் வசம் ஒப்படைத்தல்.
- குழு ஆலோசனை முறையில் குழந்தையை ஈடுபடுத்துதல்.
- நன்னடத்தை அதிகாரியின் மேற்பார்வையில் குழந்தையை பெற்றோர், உறவினர் அல்லது பொறுப்பேற்கும் தனிநபர் அல்லது நிறுவனத்திடம் ஒப்படைத்தல்.

*அத்தியாயம் 5*

# இளைஞர் நீதி சட்ட வரைமுறைகள்

**நோக்கம்**

- இளவயது குற்றவாளிகள் மற்றும் அதன் நீதி சட்ட நடை முறைகளை அறிதல்.

**இளவயது குற்றவாளிகள்**

மனமுதிர்ச்சி மற்றும் மனப்பக்குவம் அடையாத இளைஞர்கள் செய்யும் குற்றங்கள் சட்டப்படி குற்றங்களாக கருதப்பட்டாலும், அவர்களுக்கு சில பாதுகாப்பும் சலுகைகளும் அளிக்கப்பட வேண்டும். இதையே, ஐ.நா.சபையின் மூலம் 1985-ம் ஆண்டு கொண்டு வரப்பட்ட இளைஞர் நீதிக்கான குறைந்தபட்ச விதி முறைகளும் வலியுறுத்துகின்றன.

**இந்திய தண்டனைச்சட்டம் 1860**

- 7 வயதுக்குட்பட்ட குழந்தை செய்யும் எந்த செயலும் தண்டிக்கத் தக்க செயலாகக் கருதக்கூடாது. (இ.த.ச 1860 - பிரிவு 82).
- 7 முதல் 12 வயதுக்குட்பட்ட குழந்தை செய்யும் செயல் அதன் மனமுதிர்ச்சி, புரிந்து கொள்ளும் திறன் ஆகியவற்றைப் பொருத்தே குற்றமாகக் கருதப்படும். (இ.த.ச 1860 - பிரிவு 83)

**இளைஞர் நீதிச்சட்டம் 2000**

மாநில அரசுகளே இச்சட்டத்தை செயல்படுத்த வேண்டும். தமிழகத்தில் இச்சட்டத்தை நேரடியாக அமல்படுத்தும் உரிமை தமிழக அரசின் சமூகப் பாதுகாப்புத் துறைக்கு உண்டு.

இதன்படி,

- இளம் குற்றவாளிகள் செய்ததாக கருதப்பட்ட செயல் எத்தகைய கடுமையான குற்றமாக இருந்தாலும் அவரை ஜாமீனில் அனுப்ப அனுமதி உண்டு.
- காவல் நிலையத்திலோ அல்லது சிறையிலோ வைக்க அனுமதி இல்லை.



*அத்தியாயம் 4*

# குழந்தைகளின் வளர்ச்சி மற்றும் பாதுகாப்பிற்கான உரிமைகள்

**நோக்கம்**



- குழந்தைகளின் வளர்ச்சி மற்றும் பாதுகாப்பிற்கான உரிமைகளை அறிதல்.
- குழந்தைகளின் குடும்பம் சார்ந்த உரிமைகளை அறிதல்.
- குழந்தைகளின் வாழ்வாதார உரிமைகளை அறிதல்.

கருவிலிருக்கும் குழந்தைக்கும் பல உரிமைகள் உள்ளன. உயிருடன் பிறக்க, தனக்கென ஒரு குடியுரிமை, பெயர், குடும்ப பாரம்பரியம், சொத்துரிமை அனைத்தும் பெற கருவிலிருக்கும் குழந்தைக்கும் உரிமை உள்ளது.

இந்திய தண்டனைச்சட்டத்தின் படி ஒரு பெண்ணின் சம்மதத்துடன் அல்லது சம்மதமின்றி கருக்கலைப்பது, குழந்தை உயிருடன் பிறப்பதற்கு தடையாக இருப்பது, குழந்தை பிறப்பை மறைத்து அதன் உடலை ரகசியமாக புதைப்பது ஆகியவை கடுமையான தண்டனைக்கு உட்பட்டவை. எனினும், மருத்துவ ஆலோசனைப்படி, ஒரு பெண்ணின் உடல் நலம் கருதி அல்லது குடும்ப கட்டுப்பாட்டு முறையில் தோல்வி ஆகிய காரணங்களை சுட்டிக்காட்டி கருக்கலைப்பு செய்ய ஒரு பெண்ணிற்கு உரிமை உண்டு. ஆனால், அத்தகைய கருக்கலைப்பு தகுந்த காரணங்களுக்காக குறிப்பட்ட காலக்கட்டத்திற்குள், அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட மருத்துமனைகளில் மட்டுமே நடைபெற வேண்டும்.

கருவில் உள்ள சிசு பெண் குழந்தை என நுண்ணறிவு சோதனை மூலம் அறிந்து அதை உடனே கலைத்து விடும் நிகழ்வு தற்போது நம் நாட்டில் அதிகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. விஞ்ஞானத்தின் முற்போக்கான இவ்வளர்ச்சி பெண் சிசுவின் உயிருடன் பிறக்கும் உரிமைக்கு தடையாக இருப்பதை தவிர்க்கும் பொருட்டு 1994 ம் ஆண்டு கருவில் இருக்கும் சிசுவின் நிலைப்பாட்டை கண்டறியும் நுண்ணறிவு முறையை முறைப்படி பயன்படுத்தவும், தவறான காரணத்திற்கு பயன்படுத்தப்படுவதை தடை செய்யும் சட்டம் 1994-ல் கொண்டு வரப்பட்டது. [The Pre-diagnostic Techniques Regulation and Prevention of Misuse) Act 1994]

இந்தியாவில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் இந்திய குடியுரிமை உண்டு. அயல் நாட்டில் வசிக்கும் இந்திய பிரஜைக்கும் இந்திய குடியுரிமை உண்டு. ஆனால், இந்திய குடியுரிமையுடன் அயல் நாட்டுக்குடியுரிமையும் சேர்த்துப் பெற உரிமை இல்லை.

### குழந்தைகளின் குடும்பம் சார்ந்த உரிமைகள்

- குழந்தைககளின் உடல் மற்றும் மன வளர்ச்சிக்குப் பெரிதும் உதவக்கூடிய அன்பு, குடும்ப அரவணைப்பு.
- முன்மாதிரியான பெற்றோர்.
- ஆரோக்கியமிக்க சமூக பொருளாதார சூழ்நிலை.

### குழந்தை வளர்ப்புச் சட்ட வரைமுறைகள்

#### காப்பாளர்

ஒரு குழந்தையின் வளர்ச்சி, கல்வி, எதிர்காலம் அதன் சொத்துக்கள் ஆகிய அனைத்தும் குறித்து முடிவெடுக்கும் உரிமையும் கடமையும் பெற்றவர். குழந்தைக்கும் காப்பாளருக்கும் இடையே இருக்கும் சட்ட உறவு முறை குழந்தையின் 18-21 வயது வரை நீடிக்கும்.

#### வளர்ப்பு

தாய்-தந்தையருடன் வாழ்வது குழந்தைக்கு கிடைக்க வேண்டிய நியாயமான உரிமை. எனினும், தாய்-தந்தை பிரிய எண்ணும் சூழலில் குழந்தை யாரிடம் வளர்வது என்பதை உரிய சட்டத்தைக் கொண்டு மனிதாபிமான முறையில் நீதிமன்றம் தீர்மானிக்கும்.



#### ஜீவனாம்சம்

ஒரு குழந்தையை பெற்றெடுத்து அதனை வளர்க்கும் பொறுப்பில் இருந்து தவறும் பெற்றோர்களிடம் இருந்து அக்குழந்தை சட்டத்தின் உதவியுடன் நீதிமன்றம் மூலம் ஜீவனாம்சம் பெறலாம்.

#### சொத்துரிமை

தாய்-தந்தையரின் சொத்துக்கள், குடும்ப சொத்து, வாரிசு உரிமை கோருதல் ஆகியவை குழந்தைகளின் முக்கிய உரிமைகள் ஆகும்.

#### குழந்தைத் திருமணம்

குழந்தைத் திருமணம் என்பது உரிமை மீறலே. ஒரு குழந்தையின் வளர்ச்சிக்கான உரிமைகள், பாதுகாப்பு உரிமைகள் என அனைத்திற்கும் சவாலாக விளங்குவது குழந்தைத் திருமணங்கள் தான். 1929-ம் ஆண்டே **'சாரதா சட்டம்'** எனப்படும் பாலிய விவாகத் தடைச்சட்டம் குழந்தைத் திருமணத்தை தடை செய்கிறது.

#### நடைமுறை செயல்பாடு

- **நீங்கள் மேற்கூறிய தகவல்களை அறிந்திருக்கிறீர்கள். இதனை உங்கள் நண்பர்கள், பெற்றோர்கள், ஆசிரியர் மற்றும் உங்களுடன் நெருக்கமான பிறரோடு எவ்வாறு விவாதிப்பீர்?**

